## (ஊ) அரசாங்க நிதி

**1960–61**ம் நிதியாண்டு

இலங்கை அரசாங்கத்தின் 1960–61ம் நிதியாண்டிற்கான கணக்குகளை 96–97 பக்கங்களிலுள்ள II–42ம் அட்டவணை சுருக்கமாக முந்தைய ஆண்டுகளுக்கான கணக்கு விபரங்களுடன், காட்டுகின்றது. இவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ள அரசாங்க வரவு செலவுத்திட்ட இயக்கங்களின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:-

(அ) 1958–59ல் 13304 இலட்சம் ரூபாய்களாகவும், 1959–60ல் 14038 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய மொத்த அரசிறையுடன் ஒப்பிடுகையில், 1960–61ம் ஆண்டில் மொத்த அரசிறை 15139 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது.

(ஆ) 1958–59ல் 17380 இலட்சம் ரூபாய்களாகவும், 1959–60ல் 18200 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய மொத்த வாக்களிக்கப்பட்ட செலவுடன் ஒப்பிடுகையில், 1960–61ல் இது 19540 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. இந்த எண்தொகைகள், ஆழ்நிதிக்கு உதவிய தொகையையும், ஏட்டுச் சீரமைப்புக்களையும் தவிர்த்தனவாகும், மகாவங்கியிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு விசேடக்கடன் மூலம் சர்வதேச பண நிதிக்கு ஈட்டிய 370 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கட்டுப்பண பங்கையும் 1959–60க்கான எண்தொகைகள் நீக்கியுள்ளன.

(இ) முற்பணங்களின் பேரில் ஏற்பட்ட இயக்கங்களின் விளைவாக 1958–59ல் 58 இலட்சம் ரூபாய்களும், 1959–60ல் 13 இலட்சம் ரூபாய்களும் கொண்ட நிகரக்கொடுப்பணவுகள் ஏற்பட்டன. 1960–61ல் இவ்வியக்கங்களின் விளைவாக 142 இலட்சம் ரூபாய்கள் கொண்ட நிகரக்கொடுப்பனவு ஏற்பட்டது.

(ஈ) இந்த இயக்கங்களின் நிகர விளைவாக, 1958–59ல் 4134 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பணக்குறையும், 1959–60ல் 4175 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பணக்குறையும், 1960–61ல் 4543 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பணக்குறையும் ஏற்பட்டது.

1960–61ல் ஏற்பட்ட பணக்குறையான 4543 இலட்சம் ரூபாய்கள் மூலவரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில் திட்டமிடப்பட்ட பணக்குறையான 3261 இலட்சம்* ரூபாய்களிலும் பார்க்க 1282 இலட்சம் ரூபாய்களால் மேலதிகமாக உள்ளது.

உண்மையாகச் சேகரிக்கப்பட்ட அரசிறை, மூலமதிப்பீடு அரசிறையிலும் பார்க்க 1200 இலட்சம் ரூபாய்களால் குறைந்திருந்தமை காரணமாகவே, மதிப்பீட்டுப் பணக்குறைக்கும் உண்மையாக ஏற்பட்ட பணக்குறைக்கும் இடையே காணப்பட்ட வித்தியாசம் பிரதானமாக உண்டாயிற்று. பெரும்பாலும் 1960–61ம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் புகுத்திய புதிய வரிகளிலிருந்து கிடைத்த வருவாய்கள் சம்பந்தமாகவே, மதிப்பிடப்பட்டதிலும் பார்க்கக் குறைவான அரசிறை சேகரிக்கப்பட்டது. அத்துடன் மூலமதிப்பீடுகளிலும் பார்க்க உண்மையாக ஏற்பட்ட செலவுகளும், 81 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மேலதிகத்தைக் காட்டின.

---

* 1960-61க்கான வரவு செலவுத்திட்டப் பிரசங்கத்தில் அறிவிக்கப்பட்ட தொகை 3400 இலட்சம் ரூபாய்களாகும். பாராளுமன்றம் குழுவாக அமர்ந்து ஆராய்ந்த போது கூடுதலாக்கப்பட்ட செலவுகளுடன், பாராளுமன்றம் அங்கீகரித்த மூலவரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 3623 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஒரு மொத்த பணக்குறையைக் காட்டின. இத்தொகையிலிருந்து, மதிப்பிடப்பட்ட ஆழ்நிதிக்கு உதவும் 361 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் தொகையை நீக்கிவிட்டு, இம்மதிப்பீட்டுப்பணக் குறைவாகிய 3262 இலட்சம் ரூபாய்கள் பெறப்பட்டது.

முந்தைய இரு நிதியாண்டுகளில் காணப்பட்ட ஒரு போக்கை காட்டிலும் 1960–61ம் ஆண்டின் போக்கு ஒருவகையில் மிக மிக வேறுப்பட்டதாகும். 1958–59, 1959–60 ஆண்டுகளில் உண்மையாக ஏற்பட்ட குறை, மூலமதிப்பீடுகளின்படி உள்ள குறையிலும் பார்க்க மேலதிகமாக விளங்கிற்று. ஆயினும் இவ்விரு ஆண்டுகளிலும், நடைமுறைக்கணக்கு மூலமதிப்பீடுகளோடு ஒப்பிடுகையில் மிகவும் மேலதிகமாக இருந்ததே இதற்கு காரணமாக விளங்கியது. 1958–59ம், 1959–60ம் ஆண்டுகளில், மூலமதிப்பீட்டிலும் பார்க்க சேகரிக்கப்பட்ட அரசிறை மேலதிகமாகவே விளங்கிற்று. 1960–61ம் ஆண்டில், வரவு செலவுத்திட்டத்தில் எதிர்ப்பார்க்கப்பட்டவை நிகழாமல் போனதற்கு, மதிப்பிடப்பட்ட அளவிலும் பார்க்க சேகரிக்கப்பட்ட அரசிறை கணிசமாகக்குறைந்து விளங்கியமைதான் காரணமாகும். இது கடந்த சிலகால அனுபவங்களுக்கு வேறுபட்டதாக விளங்கிற்று.

1958–59, 1959–60க்கான எண்தொகைகள், உண்மையாக ஏற்பட்ட மூலதனச் செலவு மூலமதிப்பீடுகளிலும் பார்க்க கணிசமாக குறைந்துள்ளதென்பதை காட்டுகின்றன. 1960/61ல் மூலதனச் செலவில் மூலமதிப்பீட்டில் 25 சதவீதமானச் செலவுக் குறைவு ஏற்படுமென எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனுல் உண்மையாக ஏற்பட்ட செலவு ஒரு சிறிய அளவினுல் மட்டும் குறைந்து காணப்பட்டது.

அரசிறை: 1960–61ல் கிடைத்த மொத்த அரசிறை 5139 இலட்சம் ரூபாய்களாகும். 1959–60ல் கிடைத்த அரசிறையிலும் பார்க்க இது 1101 இலட்சம் ரூபாய்களால் கூடியது ஆகும். இவ்வதிகரிப்புக்கு, இறக்குமதித் தீர்வைகள், வருமானவரி, தனிப்பட்ட வரிகள் முதலியன மூலம் கிடைத்த உயர்ந்த வருவாய்களே, பிரதான காரணங்களாகும். 1960–61ல் புகுத்தப்பட்ட நிலவரி மூலம் கிடைத்த வருவாய்களும் இந்த அதிகரிப்புக்கு உதவிய ஒரு காரணமாகும்.

1959–60ல் கிடைத்த அரசிறையுடன், 1960–61ம் ஆண்டு மூலமதிப்பீடுகளையும், 1960/61ல் கிடைத்த அரசிறையையும் ஒப்பிடுகையில் அவற்றில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் பின்வருவாறு:–

**அட்டவணை II—41**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960–61க்கான மூலமதிப்பீடுகள் | 1960–61ல் கிடைத்த அரசிறை | 1959–60ல் கிடைத்த அரசிறை |
|---|---|---|---|
| 1. ஏற்றுமதித் தீர்வைகள் .. .. .. | 337·7 | 303·6 | 327·2 |
| (அ) தேயிலை (தேயிலை வரி உட்பட) .. .. | 218·3 | 213·4 | 218·0 |
| (ஆ) இரப்பர் (ஏற்றுமதி உத்தரவுச்சீட்டுக் கூலி உட்பட) | 80·0 | 54·3 | 79·7 |
| (இ) தெங்கு .. .. .. .. | 33·6 | 30·4 | 25·7 |
| 2. இறக்குமதித் தீர்வைகள் .. .. .. | 430·9 | 435·3 | 406.5 |
| 3. வருமானவரி (மேலதிகக் கட்டணங்களைத் தவிர்த்து) .. | 205·0 | 229·9 | 189·5 |
| மேலதிகக் கட்டணம் .. .. .. | 30·0 | 28·9 | — |
| 4. தனிப்பட்ட வரிகள்–செல்வம், செலவு, நன்கொடைகள் | 19·0 | 11·8 | 1·2 |
| 5. 1960/61க்கான வரவு செலவுத் திட்டம் புகுத்திய புது வரிகள் .. .. .. .. | 93·0 | 17·1 | — |
| (அ) நிலவரி .. .. .. .. | 15·0 | 7·9 | — |
| (ஆ) வியாபாரப் பெயர் பதிவுவரி .. .. | 50·0 | 3·3 | — |
| (இ) பங்கு முதல் வரி .. .. .. | 10·0 | 2·4 | — |
| (ஈ) உயர்தொழில் வரி .. .. .. | 3·0 | ... | — |
| (உ) விசா வரி .. .. .. .. | 15·0 | 3·5 | — |

மூலம்: இலங்கை மகா வங்கி

அட்டவணை II—42

அரசாங்க நிகரப்பண

| | 1951—52 | 1952—53 |
|---|---|---|
| 1. நிகரப்பணமிகை/குறை (—) .. .. .. .. | — 257·1 | — 231·9 |
| (அ) அரசிறை .. .. .. .. | 954·0 | 952·5 |
| (ஆ) செலவு (அதாவது கடன் வாங்குதல், கடன் கொடுத்தல் இயக்கங்களின் பேரில் ஏற்பட்ட நிகர வரவுகளை அல்லது கொடுப்பனவுகளைத் தவிர்த்த மொத்தக் கொடுப்பனவுகள்) .. .. | —1,211·1 | 1,184·4 |
| (i) ஆழ்நிதிக்கு வழங்கிய உதவு தொகையையும், அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படுகடனையும் தவிர்த்து மீண்டு எழும் செலவு (2) (ஆ) (i) விடயம் பார்க்க)✱ .. .. .. .. | —1 004·6 | — 893·5 |
| (உணவு மானயம்) .. .. .. .. | **(247·8)** | **(127·0)** |
| (ii) மூலதனச் செலவு✱ .. .. .. .. | — 203·0 | — 220·6 |
| (iii) தேசிய அபிவிருத்தி ஒதுக்கு நிதியால்அடைக்கப்படும் செலவு | — 7·7 | — 6·4 |
| (iv) களஞ்சியங்கள், பொருட்கள் ஆகியனவற்றின் கணக்கிற்குக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் .. .. | — 16·8 | — 2·4 |
| (v) இதர முற்பணங்கள்✱ .. .. .. | 19·0 | — 52·8 |
| (vi) ஏனையவை .. .. .. | 2·0 | — 8·7 |
| **குறை நிவர்த்திப்புக்கு நிதியீட்டுதல்** | | |
| 2. அரசாங்கக் கடன்பாட்டு அல்லது கடன் கொடுப்பனவு இயக்கங்களின் விளைவாக ஏற்பட்ட நிகரப்பண வரவுகள் அல்லது கொடுப்பணவுகள் (—) .. | 184·1 | 216·5 |
| (அ) நிர்வாகக் கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்ட கடன்களும் சில்லறைக் கடன்களும் உட்பட). .. .. .. | — 34·2 | 11·9 |
| (i) கட்டுப்பணங்கள் (வழக்குத் தொடர்வோர், ஒப்பந்தக்காரர் முதலியவர்களிடமிருந்து வந்தனவையும் அந்நியநாட்டு உதவிகளில் செலவு செய்யப்படாத மீதிகளும்). .. | — 16·2 | 21·4 |
| (ii) இதர பல வகை நிதிகள் (விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பளநிதி, அரசாங்க சேவையாளர் சேமநிதி முதலியன). .. .. .. .. | — 0·6 | — 0·2 |
| (iii) சில்லறைக் கடன்கள் (கமத்தொழில், கைத்தொழில் நாணய கூடடுத்தாபனம், உள்நாட்டு அபிவிருத்திக் கடன்நிதி, உள்ளூர் ஆட்சிச்சபைகள் ஆகியனவற்றிற்குக் கொடுத்தவை.) .. .. .. .. | 18·6 | — 9·3 |
| (ஆ) உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடும், திருப்பிக் கொடுக்கப்பட்டனவும் | 218·3 | 204·6 |
| (i) ரூபாய்க்கடன்கள். .. .. .. .. | 102·4 | 80·0 |
| ஆழ்நிதிக்கு வழங்கிய உதவுதொகையும் அரசிறையிலிருந்து நேரடியாகத் திருப்பிக் கொடுக்கப்பட்ட பொதுப்படுகடனும் (கழிய) .. .. .. .. | **18·4** | **23·1** |
| மீதி .. .. .. .. | 84·0 | 56·9 |
| (ii) இறைசேரி உண்டியல்கள் .. .. .. | 62·3 | 90·6 |
| (iii) மகாவங்கி வழங்கிய முற்பணங்கள் .. .. | 72·0 | — 1·5 |
| (iv) வரிப்பண ஒதுக்குப் பத்திரங்கள் .. .. .. | — | — |
| (v) இதர† .. .. .. .. | — | 58·6 |
| (இ) அந்நியக் கடன்பாடு .. .. .. .. | — | — |
| 3, (உடனடியாகத் தேறக்கூடிய சொத்துக்களும் உட்பட) பணமீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் .. .. .. .. | — 73·0 | —15·4 |

✱ 1960—61 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் தொடக்கம், ''அரசிறையால் அடைக்கப்படும் செலவு'', எனவும் ''கடன் நிதியால் அடைக்கப்படும் செலவு'' எனவும், செலவைப் பாகுபடுத்தும் முறை கைவிடப்பட்டது. அதற்குப் பதிலாக அரசாங்கத்தின் மொத்தச் செலவு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, சொந்த வரும்படிகள், நிர்வாகச் செலவுகள், திணைக்களங்களின் சேவைகள், பொருளாதார அபிவிருத்தி முதலியன ஆகும். கடைசியாகக் கூறப்பட்ட மூன்று பகுதிகள் ஒவ்வொன்றும், மீண்டெழும் செலவு, மூலதனச் செலவு என மேலும் பிரிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அரசாங்கத்தின் மொத்தச் செலவு ஏழு வாக்களிப்புக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த அட்டவணையில் சொந்த வரும்படிகள், மீண்டெழும் செலவுகள் ஆகிய வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக்கள் 1, 2, 4, 6) கீழ்வரும் மொத்தச் செலவும், மூலதனச் செலவு வாக்களிப்புக்களின் (அதாவது வாக்களிப்புக்கள் 3, 5, 7) மொத்தமும் முறையே மீண்டெழும் செலவு எனவும், மூலதனச் செலவு எனவும் வெவ்வேறாகக் காட்டப்பட்டுள்ளன. 1960—61க்கு முந்தைய ஆண்டுகளில் இத்தகைய ஓர் பாகுபாடு கிடையாதபடியால், அரசிறையால் அடைக்கப்படும் செலவும், கடன்நிதியால் அடைக்கப்படும் செலவும், முறையே மீண்டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் ஒப்பிடத்தக்கன என மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முந்தைய நிதியாண்டுகளில் ஏற்பட்டு, நிதியீட்டப்பட்ட முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் பேரில் உண்டான நட்டங்களையும், கடன் வேலைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களையும் மீண்

மிகை/குறை (—)

பத்து இலட்சம் ரூபாய்கள்

| 1953—54 | 1954—55 | 1955—56 | 1956—57 | 1957—58 | 1958—59 | 1959—60 | 1960–61 (இ) |
|---|---|---|---|---|---|---|---|
| 33·7 | 127·6 | — 1·2 | — 196·4 | — 222·3 | — 413·4 | — 417·5 | — 454·3 |
| 1,026·2 | 1,158·6 | 1,257·2 | 1,260·5 | 1,280·0 | 1,330·4 | 1,403·8 | 1,513·9 |
| — 992·5 | —1,031·0 | — 1,258·4 | — 1,456·9 | — 1,502·3 | — 1,743·8 | —1,821·3 | —1,968·2 |
| — 772·0 | — 864·9 (அ) | — 1,014·4 | — 1,105·2 | — 1,280·1 | — 1,432·2 | —1,511·9 (ஆ) | — 1,540·8 |
| **(12·0)** | **(36·0) (அ)** | **(79·5)** | **(105·5)** | **(112·0)** | **(146·5)** | **(193·0)** | **(248·0)** |
| — 162·3 | — 215·5 | — 211·0 | — 213·3 | — 282·6 | — 303·4 | — 306·6 | — 411·7 |
| — 3·2 | — 2·1 | — 4·0 | — 5·1 | — 3·0 | — 2·4 | — 1·5 | — 1·5 |
| 4·6 | 9·9 | 1·2 | — 14·5 | ... | 10·5 | — 7·1 | 1·9 |
| — 61·1 | 34·0 | — 30·3 | — 115·8 | 54·5 | — 17·1 | 5·8 | — 15·9 |
| 1·5 | 7·6 | 0·1 | — 3·0 | 8·9 | 0·8 | ... | — 0·2 |
| — 35·3 | — 39·0 | 12·2 | 175·4 | 174·7 | 351·8 | 411·6 | 454·3 |
| — 4·6 | 29·1 | — 36·5 | — 9·4 | 72·5 | 27·6 | 57·4 | 34·5 |
| — 2·1 | 34·5 | — 10·8 | 9·0 | 73·9 | 27·3 | 62·3 | 41·6 |
| 0·3 | — 0·9 | — 4·8 | — 2·3 | 20·1 | 4·2 | 2·7 | — 1·0 |
| — 2·8 | — 4·5 | — 20·9 | — 16·1 | — 21·5 | — 3·9 | — 7·6 | — 6·1 |
| — 94·0 | — 80·2 | 43·5 | 166·2 | 78·5 | 288·7 | 324·9 | 403·5 |
| 70·0 | 75·0 | 74·5 | 94·9 | 45·0 | 95·0 | 134·8 | 214·9 |
| **22·6** | **44·5** | **39·0** | **31·1** | **26·5** | **32·2** | **33·3** | **35·1** |
| 47·4 | 30·5 | 35·5 | 63·8 | 18·5 | 62·8 | 101·5 | 179·8 |
| — 78·1 | — 44·9 | 8·0 | — 3·0 | 74·6 | 179·0 | 228·2 | 198·4 |
| — 4·7 | — 65·8 | — | 96·3 | — 13·8 | 41·1 | 3·1 (ஆ) | 20·6 (ஆ) |
| — | — | — | 9·1 | — 0·8 | 5·8 | — 7·9 | 4·7 |
| — 58·6 | — | — | — | — | — | — | — |
| 63·3 | 12·1 | 5·2 | 18·6 | 23·7 | 35·5 | 29·3 | 16·3 |
| — 1·6 | 88·6 | 11·0 | — 21·0 | — 47·5 | — 61·7 | — 6·0 | ... |

மூலம்: இலங்கை மகா வங்கி

டெழும் செலவுக்கும், மூலதனச் செலவுக்கும் மாற்றியதன் பயனுக எழுந்த ஏட்டுச் சீரமைப்புக்களை (பற்று, வரவுகள்) தவிர்க்கின்றது. ஆகவே இத்தொகைள், இலங்கை அரசாங்கத்தின் கணக்குகளில் பிரசுரிக்கப்பட்ட தொகைகளுடன் ஒத்திருக்கமாட்டாது.

† அரசாங்க ஆதிக்கமுள்ள முகவர் நிலையங்களிலிருந்து பெற்ற கடன்கள்.

(அ) 1954—55ம் ஆண்டுக்கான உணவு மான்யக்கணக்காக விளங்கிய 360 இலட்சம் ரூபாய்கள் முற்பணக் கணக்குகளிலிருந்து மீண்டெழும் செலவுக்கு, 1958—59ல் மாற்றப்பட்டன. 1958—59ம் ஆண்டுக்கான தொகைகளிலிருந்து இந்த ஏட்டுச் சீரமைப்பு தவிர்க்கப்பட்டிருக்க (*கீழ் உள்ள குறிப்பைப் பார்க்க), 1954—55ம் ஆண்டுக்கான தொகைகள், இச்சீரமைப்பிற்கேற்ப திருப்பியமைக்கப்பட்டுள்ளன

(ஆ) 1959–60ம் ஆண்டில், சர்வதேச நாணய நிதியில் இலங்கையில் கட்டுப்பணம் அதிகரிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட 370 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், 1960—61ம் ஆண்டில் சர்வதேசப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் ஆகியனவற்றிற்கு செய்த 22 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடுப்பனவையும், தவிர்க்கின்றது. இக்கொடுப்பனவுகள் மகாவங்கியிலிருந்து பெற்ற விசேடக் கடன்கள் மூலம் ஈட்டப்பட்டன.

(இ) தற்காலிகமானவை.

மூலமதிப்பீடுகளிலும் பார்க்க ஏற்றுமதித்தீர்வை மூலம் உண்மையாக கிடைத்த வருவாய்கள் 341 இலட்சம் ரூபாய்களால் குறைந்துள்ளன. இக்குறைவு, இரப்பர் மூலம் கிடைத்த வருவாய் சம்பந்தமானதும் (257 இலட்சம் ரூபாய்கள்) தெங்கு மூலம் கிடைத்த வருவாய் சம்பந்தமானதும் (32 இலட்சம் ரூபாய்கள்) தேயிலை மூலம் கிடைத்த வருவாய் சம்பந்தமானதும் (49 இலட்சம் ரூபாய்கள்) ஆகும். இரப்பர், தெங்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக இவற்றின் ஏற்றுமதித்தீர்வை குறைக்கப்பட்டன. ஒரு இருத்தல் இரப்பர் பேரில் உள்ள ஏற்றுமதித்தீர்வை, 1960ம் ஆண்டு கார்த்திகையில் 38 சதத்திலிருந்து 30 சதத்திற்கும், 1961ம் ஆண்டு மாசியில் 20 சதத்திற்கும் குறைக்கப்பட்டது. கொப்பரு, தேங்காய் எண்ணெய், தேங்காய்த் துருவல் முதலியவற்றின் ஒரு தொன்னுக்காகிய ஏற்றுமதித்தீர்வைகள் ரூபா 245, ரூபா 185, ரூபா 140திலிருந்து, முறையே ரூபா 185, ரூபா 140, ரூபா 100க்கு 1961ம் ஆண்டு வைகாசி 22ல் குறைக்கப்பட்டன.

இறக்குமதித் தீர்வைகள் மூலம் கிடைத்த வருவாய்களான 4353 இலட்சம் ரூபாய்கள் 1959/60ல் கிடைத்ததிலும் பார்க்க 288 இலட்சம் ரூபாய்களால் கூடியது ஆகும். இவ்விறக்குமதித் தீர்வைகள் சம்பந்தப்பட்ட வரையில், ஏறக்குறைய மூலமதிப்பீடுகளுக்கேற்ற முறையில் வருவாய்கள் சேகரிக்கப்பட்டன. ஆடைவகைகளின் இறக்குமதித்தீர்வையும் (105 இலட்சம் ரூபாய்கள்) மோட்டார், எரி எண்ணெய், திரவ எரிப்பொருட்களின் இறக்குமதித்தீர்வைகள் (187 இலட்சம் ரூபாய்கள்) புகையிலை, சிகரெட்டுகளின் இறக்குமதித் தீர்வைகள் (38 இலட்சம் ரூபாய்கள்) ஏனைய பொருட்களின் தீர்வைகள் (87 இலட்சம் ரூபாய்கள் சம்பந்தமாகவே பிரதானமாக 1959/60லும் பார்க்க உயர்ந்த இறக்குமதித்தீர்வை வருவாயில் சேகரிக்கப்பட்டன. போக்குவரத்துச்சாதனங்களின் பேரில் உள்ள இறக்குமதித் தீர்வைகள் 1959/60லும் பார்க்க 85 இலட்சம் ரூபாய்கள் குறைந்த வருவாய் கொண்டுவந்தன. கடந்த நிதியாண்டின் இறுதிப்பகுதியில், அதாவது 1960ம் ஆண்டு ஆவணியில், ஆடைவகைகள், கடிகாரங்கள் முதலியனவற்றின் பேரில் அளவுக்கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டதோடு, பலவகை இறக்குமதிகளின் பேரில் கூடிய இறக்குமதித் தீர்வைகளும் புகுத்தப்பட்டன. 1961ம் ஆண்டு தையில் இந்நடவடிக்கைகளுக்கு பக்கபலமாக மேலும் சில அளவுக் கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டதுடன், உணவுப் பொருட்கள் தவிர்த்த ஏனைய சகல இறக்குமதிகளின் பேரிலும் 5 சதவீத பொது இறக்குமதித் தீர்வை ஒன்று விதிக்கப்பட்டது.

மேலதிகக்கட்டணம் தவிர்ந்த வருமானவரி மூலம் கிடைத்த வருவாய்களில் 1959-60ம் ஆண்டு வருவாய்களுக்குமேல் ஏற்பட்ட அதிகரிப்பு, 1958க்கும் 1959க்கும் இடையே (ஏற்றுமதித்தீர்வைகள் தவிர்ந்த நிகர) ஏற்றுமதி வருமானங்களில் ஏற்பட்ட வளர்ச்சியை ஓரளவுக்கு பிரதிபலிக்கின்றது. இவ்வருமானவரிமூலம் கிடைத்த வருவாய் அதிகரிப்புக்கு உள்நாட்டுத்துறையில் உள்ள வருமானங்களில் ஏற்பட்ட வளர்ச்சியும் உதவி புரிந்திருக்கக்கூடும்.

1960-61ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டம் புகுத்திய புதிய வரிகள் மூலம் உண்மையாக கிடைத்த வருவாய்களுக்கும், கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட வருவாய்களுக்கும் இடையே உண்டான கணிசமான வித்தியாசத்திற்கு, இதற்குரிய சட்டங்களை ஆக்குவதில் ஏற்பட்ட தாமதமே பெரும்பாலும் காரணமாக விளங்கிற்று. 1960/61 சம்பந்தப்பட்ட வரையில் வழக்கமாக ஆடியில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டம், புரட்டாதி வரைக்கும் தாமதிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது. ஆடிமாத இறுதிப்பகுதியிலேயே புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தது. மேலும் வழக்கமான வரி விதிப்புப்பாதையில் விட்டு விலகி, புதிய வரிகள் பல விதிக்கப்பட்டமையால், இது சம்பந்தமாக புதிய சட்டங்களை ஆக்கவேண்டிய அவசியமிருந்தது. பெரும்பாலான புதிய வரிகள் சம்பந்தப்பட்ட வரையில், நிதியாண்டின் இறுதிப்பகுதியிலேயே சட்டங்கள் முடிவு செய்யப்பட்டன. அத்துடன் முதன் முதலாகப் புகுத்தப்பட்ட வரிகள் விடயத்தில், கிடைக்கக்கூடிய வருவாய்களைச் செம்மையாக மதிப்பிடுதல் ஒரு பிரச்சனையாக ஏற்படுகின்றது.

நடைமுறைச் செலவு: 1958–59 முதல் 1961-62 வரையுள்ள ஆண்டுகளுக்கான நடைமுறைச்செலவு, மூலதனச்செலவு பற்றிய தரவுகள், பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II—43

அரசாங்கத்தின் செலவு

பத்து இலட்சம் ரூபாய்கள்

| வருடம் | நடைமுறைச் செலவு (1) | மூலதனச் செலவு (2) | | |
|---|---|---|---|---|
| | | மெய்ச்சொத்துகளைக் கொள்ளுதலும், ஆக்குதலும், பராமரித்தலும் | அரசாங்க முகவர் நிலையங்களுக்குக் கடன் | மொத்தம் |
| 1958–59 .. .. .. .. .. .. | 1,274·4 | 443·2 | 49·8 | 493·0 |
| 1959–60 .. .. .. .. .. .. | 1,365·4 | 440·1 | 55·6 | 495·7 |
| 1960–61 மூலமதிப்பீடுகள் .. .. .. .. | 1,464·0 | 503·5 | 19·4 | 522·9 |
| உண்மையாக ஏற்பட்டவை (தற்காலிகமானது) | 1,480·7 | 464·7 | 50·7 | 515·4 |
| 1961–62 மூலமதிப்பீடுகள் .. .. .. .. | 1,450·3 | 580·6 | 59·9 | 640·5 |

மூலம்: இலங்கை மகா வங்கி

(1) மீண்டு வருஞ் செலவுகளுக்கான வாக்குப் பணங்கள், 1, 2, 3, 4, 6, ஆகியவற்றின் மொத்தத்திலிருந்து, ஆழ்நிதிக்கு உதவும் தொகையின் பெறுமதியும், (நெடுங்கால உபயோகமுள்ள பொருட்களின் கொள்வனவு, பராமரிப்புச் செலவு போன்ற) மூலதனச் செலவுகளையும் நீக்கிய பின்னர் பெறப்படுவதுதான் நடைமுறைச் செலவாகும்.

(2) மூலதனச்செலவென்பது பின்வருவனவற்றைக் கொண்டுள்ளது:- மூலதனச் செலவிற்காக வாக்களிக்கப்பட்டனவற்றின் கீழ் உள்ள செலவு (அதாவது 3ம், 5ம், 7ம், வாக்குப்பணங்கள்); சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கிக்கடன் போன்ற அந்நிய கடன்கள் மூலம் அடைக்கப்படும் செலவு; மீண்டுவரும் செலவிற்கான வாக்குப்பணங்களின் பேரில்உள்ள மூலதனச் செலவு விடயங்களும், இரப்பர் தேயிலை மாற்றுநடுகைக்கான மான்யச்செலவு போன்ற வரவு செலவுத்திட்ட செலவீடுகளைவிட மேலதிகமான செலவீடுகளும்; மின்சாரத் திணைக்களத்தின் ஒதுக்கு நிதிச் செலவு, அந்நிய செலவு முதலியன ஆகும். வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவீடுகள் 1958/59ல் 293 இலட்சம் ரூபாய்களாகவும் 1959/60ல் 389 இலட்சம் ரூபாய்களாகவும், 1960/61ல் மதிப்பீட்டின்படி 236 இலட்சம் ரூபாய்களாகவும் தற்காலிகமாக 423 இலட்சம் ரூபாய்களாகவும், 1961/62ல் 260 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிற்று.

1960–61ம் ஆண்டின் நடைமுறச் செலவு தற்காலிகத்தொகை, 1959/60ம் ஆண்டின் தொகையுடன் ஒப்பிடுகையில், 1153 இலட்சம் ரூபாய்கள் கொண்ட ஓர் அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1960/61ம் ஆண்டுச் செலவுகளில் ஏற்பட்ட பெரும் அதிகரிப்புக்கள், உணவு மான்யம் (550 இலட்சம் ரூபாய்கள்), பொதுப்படு கடனுக்காகக் கொடுக்கப்பட்ட வட்டிகள் (168 இலட்சம் ரூபாய்கள்) இளைப்பாறற் சம்பளங்கள் (58 இலட்சம் ரூபாய்கள்), ஆகியவற்றின் பேரிலேயே ஏற்பட்டன. உணவு மான்யக் கணக்கானது 1930 இலட்சம் ரூபாய்களிலிருந்து 2480 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. உணவு மான்யக்கணக்கில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஒரு பகுதியில் உத்தரவாத விலை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட நெற் கொள்வனவுகள் பெருந்தொகையாக விளங்கியமையும், மறுபகுதியில் பங்கீட்டரிசியின் விலை(அ) தாழ்த்தப்பட்டமையும் காரணங்களாக அமைந்தன.

பர்மாவுடன் செய்த ஒப்பந்தத்தின் கீழ் அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் சராசரி விலை (இறக்குமதிச்செலவையும் சேர்த்து) முந்தைய ஆண்டைப் போலவே ஒரு தொன்னுக்கு 530 ரூபாய்களாக விளங்கி நின்றது. ஐக்கிய அமெரிக்காவின் 480ம் இலக்கப் பொதுசனச் சட்டத்தின்(ஆ) கீழ் இறக்

(அ) 1960ம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதிக்கு முன்னர், ஒரு கிழமையில் ஒரு ஆளுக்கு வழங்கப்பட்ட இரண்டு படிகள் கொண்ட பங்கீட்டரிசியின் விலை முதற்படிக்கு 25 சதமாகவும் இரண்டாவது படிக்கு 45 சதமாகவும் விளங்கியது. 1960ம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதி முதல் இரண்டாவது படி அரிசியின் விலை 25 சதத்திற்கு குறைக்கப்பட்டது. ஆகவே ஒருபடி பங்கீட்டரிசியின் சராசரி விலை 35 சதத்திலிருந்து 25 சதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

(ஆ) ஐக்கிய அமெரிக்காவின் 480ம் இலக்கப் பொதுசன சட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்படும் அரிசி, கோதுமைமா முதலியனவற்றிற்கு ரூபாய்களிலேயே கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இந்த ரூபாய் கொடுப்பனவுகளில் ஒரு பகுதி இலங்கை அரசாங்கத்திற்கு நன்கொடையாக திருப்பி வழங்கப்படும் வகையாக உள்ளது.

குமதி செய்யப்பட் கோதுமை மாவின் சராசரி விலை (இறக்குமதிச் செலவையும் சேர்த்து), 1960/61ல் ஒரு தொன்னுக்கு 500 ரூபாய்களாக விளங்கி, 1961/62ல் ஒரு தொன்னுக்கு 515 ரூபாய்களுக்கு அதிகரித்தது. ஏனைய மூலங்களிலிருந்து வாங்கப்பட்ட கோதுமை மாவின் விலைகள் ஏறக்குறைய 1960/61ம் ஆண்டு விலைகளைப் போலவே தங்கி நின்றன. கோதுமை மா ஏற்றுமதி செய்யும் பிரதான நாடாக விளங்கும் ஆவுஸ்திரேலியாவிலிருந்தும் வந்த கோதுமைமாவின் சராசரி விலை (இறக்குமதிச் செலவையும் சேர்த்து) ஒரு தொன்னுக்கு 460 ரூபாய்களாகத் தங்கி நின்றது.

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் ஏற்பட்ட மொத்த நெற்கொள்வனவுகள் 239,90,587 புசல்களாகவும், அரிசி நியதியாகப் பார்க்கும் பொழுது, இது 326,272 தொன்களாகவும் விளங்கின. 1959/60ல் 270,000 தொன்கள் அரிசிக்கு நிகரான நெல்லை அரசாங்கம் வாங்கியது.

மூலதனச் செலவு: 1960–61ம் ஆண்டில் 5154 இலட்சம் ரூபாய்களாக விளங்கி நின்ற மூலதனச்செலவு (வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவீடுகளும் உட்பட) 1959–60க்காகிய மூலதனச் செலவிலும் பார்க்க 197 இலட்சம் ரூபாய்களால் கூடியதாக விளங்கியது. மெய்ச் சொத்துக்களின் கொள்வனவு, ஆக்கம், பராமரிப்பு முதலியனவற்றின் பேரில் ஏற்பட்ட செலவு 4647 இலட்சம் ரூபாய்களாகும். அரசாங்க முகவர் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் 507 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. 1959–60ம் ஆண்டில் இவை முறையே 4401 இலட்சம் ரூபாய்களாகவும் 556 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. பொருளாதாரச் சேவைகளின் பேரில் ஏற்பட்ட மூலதனச் செலவிலேயே பிரதானமாக விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில்கள் முதலியனவற்றிற்கு வாக்களிக்கப்பட்ட தொகைகளிலிலேயே இந்த அதிகரிப்பு நிகழ்ந்ததாக கிடைத்த தரவுகள் காட்டுகின்றன.

பணக்குறை நிவர்த்திப்புக்கு நிதியீட்டுதல்: 1960–61ம் ஆண்டு ஏற்பட்ட நிகரப் பணக்குறை நிவர்த்திக்கப்பட்ட முறையைப் பின்வரும் அட்டவணை மூலாதாரப் பாகுபாடு செய்து காட்டுவதுடன், அதனால் ஏற்பட்ட நிகர நாணய விரிவு விளைவுகளையும் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

**அட்டவணை II—44**

குறை நிவர்த்திப்புக்கு நிதியீட்டுதல்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | 1959–60 | | 1960–61 (தற்காலிகமானது) | |
|---|---|---|---|---|
| 1. நிர்வாகக் கடன்பாடு .. .. .. | | 57·4 | | 34·5 |
| 2. அந்நியக் கடன்பாடு .. .. .. | | 29·3 | | 16·3 |
| 3. உள்நாட்டுச்சந்தைக் கடன்பாடு—வங்கிகளல்லாத இதர மூலாதாரங்கள் .. .. .. | 117·1 | | 197·3 | |
| ஆழ்நிதிக்கு உதவிய தொகை நீக்கி .. .. | −33·3 | 83·8 | −35·1 | 162·2 |
| 4. உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு: வங்கிகள் .. .. | | 241·1 | | 241·4 |
| 5. அரசாங்க கையிருப்புப் பணங்களில் ஏற்பட்ட குறைவு .. | | 6·0 | | — |
| 6. நிகரப் பணக்குறைவு .. .. .. | | 417·5 | | 454·3 |
| 7. ஐக்கிய அமெரிக்காவின் உதவியின் பயனாக எழுந்த உள்நாட்டு நிதிகளில் ஏற்பட்ட குறைவு (சக அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கின்றது). .. .. .. | | 4·0 | | −7·5 |
| 8. வரவு செலவுத்திட்டத்தின் நிகர நாணயவிரிவு விளைவு (4+5+7). .. .. .. | | 251·1 | | 233·9 |

மூலம்: இலங்கை மகா வங்கி

மூலமதிப்பீட்டின்படி 3260 இலட்சம் ரூபாய்களாக* விளங்கிய நிகரப்பணக் குறையை நிவர்த்திப்பதற்காக நிதி அமைச்சர் அறிவித்த திட்டமான நிதி ஆதாரங்களாவன, உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டிலிருந்து 2040 இலட்சம் ரூபாய்களும், அந்நிய உதவியிலிருந்து 1000 இலட்சம் ரூபாய்களுமாகும். மேலே காட்டப்பட்ட உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டுத் தொகையில் ஒருவேளை வர்த்தக வங்கிகளின் நீண்டகால ரூபாப்பிணை கொள்வனவுகள் அடக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதைத் தவிர, வரவு செலவுத்திட்டக்குறையின் நிவர்த்திப்புக்கு நிதியீட்டுவதற்காக கொடுகடன் ஆக்கத்திற்கென ஒரு ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. ஆயினும் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட ஓர் சிறிய அதிகரிப்பும், அரசிறையிலும், அந்நிய உதவியிலும் உண்டான கணிசமான வீழ்ச்சியும், 1959-60ம் ஆண்டின் அளவிலே வங்கிகளிடமிருந்து கடன்படுதலை விளைவித்தன.

2414 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட வங்கிகளிடமிருந்து பெற்ற கடன், பிரதானமாக மகாவங்கி, வர்த்தக வங்கிகள் முதலியனவற்றின் இறைசேரி உண்டியற் கொள்வனவுகளையே கொண்டதாக விளங்கிற்று. மகாவங்கி அரசாங்கத்திற்கு நேரடியாக வழங்கிய முற்பணங்களின் தொகை 206 இலட்சம் ரூபாய்களாகும். மகாவங்கியினது இறைசேரி உண்டியற் கொள்வனவுகளின் தொகை 1850 இலட்சம் ரூபாய்களாகும். வர்த்தக வங்கிகள் 373 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையளவிற்கு இறைசேரி உண்டியல்களை வாங்கின. அத்துடன் அவை 13 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான வரிப்பன ஒதுக்குநிதிப்பத்திரங்களையும் வாங்கின. அவைகளின் ரூபாப் பிணை உடமைகள் 15 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன. 1959-60ல் 48 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான இறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்தன. அதேயாண்டு அவை தங்கள் ரூபாப் பிணை உடமைகளை 21 இலட்சம் ரூபாய்களால் குறைத்துக்கொண்டன.

1960-61ல் அரசாங்கத்தின் கையிருப்புப் பணமீதங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. 1960-61ல் ஐக்கிய அமெரிக்க நாட்டு உதவியினால் எழும் உள்நாட்டு நிதிக்கணக்கின் நிலுவை 75 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. கடந்த ஆண்டு அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளபடி, இந்த அதிகரிப்பு, அரசாங்கத்தின் நிதி இயக்கங்களின் பயனாக எழுந்த நிகர விரிவு விளைவைக் கணக்கிடுவதில் ஏற்பட்ட அரசாங்கக்கையிருப்புப் பண அதிகரிப்புக்கு சமமாக இருத்தல் கூடும். மேற்கூறிய எண்தொகைகளின் அடிப்படையில் 1960-61 அரசாங்க நிதியியக்கங்களின் பயனாக ஏற்பட்ட நிகர விரிவு விளைவு, 2339 இலட்சம் ரூபாய்களாகும். 1959-60ல் இது 2511 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது.

வங்கிகளல்லாத ஏனைய மூலாதாரங்களிலிருந்து பெற்ற நிகரச் சந்தைக்கடன்பாட்டின் 1959-60, 1960-61 ஆண்டுகளுக்கான தொகைகளை நேரடியாக ஒப்பிட்டுப்பார்த்தல் கூடாது. ஏனெனில், 1959-60ல் சாதாரணமாக திணைக்களங்கள் அரசகரும முகவர் நிலையங்கள் முதலியனவற்றால் பணச்சந்தையிலே முதலீடு செய்யப்படும் மிகையான நிதிகளில் கணிசமானதோர் தொகை இறைசேரியால் நேரடியாக கடன்வாங்கப்பட்டுள்ளது. இது மேலேயுள்ள அட்டவணையில், நிருவாகக் கடன்பாட்டின் கீழ் காட்டப்பட்டுள்ளது. 1959-60ல் இது 460 இலட்சம் ரூபாய்களாகவும் 1960—61ல் 33 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தது. இத்தொகைகளையும் கணக்கெடுத்துப்பார்க்கும் பொழுது,

* வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டத் தொகை 3723 இலட்சம் ரூபாய்களும், 2400 இலட்சம் ரூபாய்களும் ஆகும். ஆழ்நிதிக்கு உதவிய இத்தொகையாகிய 361 இலட்சம் ரூபாய்களை நீக்கிய பின்னர் 3260 இலட்சம் ரூபாய்கள், 2040 இலட்சம் ரூபாய்கள் முதலிய எண்தொகைகள் பெறப்பட்டன. ஏனெனில் ஆழ்நிதிக்கு உதவப்படும் தொகைகள் நிகரப் பணக்குறையைக் கணிப்பதற்கு சேர்க்கப்படுவதில்லை.

1959–60, 1960–61 ஆண்டுகளுக்கான வங்கிகளற்ற மூலாதாரங்களிலிருந்து பெற்ற பணச் சந்தைக் கடன்பாட்டின் சீரமைக்கப்பட்ட தொகைகளாவன, முறையே 1298 இலட்சம் ரூபாய்களும் 1655 இலட்சம் ரூபாய்களும் ஆகும். இது ஏறக் குறைய 360 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பொன்றாகும். கூட்டு நிலையங்கள், சேமிப்பு நிலையங்கள், காப்புறுதிக் கூட்டுநிலையங்கள், ஊழியர் சேம நிதி, இதர சங்கங்கள், நிலையங்கள் முதலியனவற்றிலிருந்தே பெரும்பாலும் அதிகரித்த தொகைகள் உதவப்பட்டன. இவ்வாண்டில் புதிய அரசாங்கப்பத்திரங்களுக்கு ஆழ்நிதி உதவிய தொகை ஓர் வீழ்ச்சியைக் காட்டிற்று. சங்கங்களும் நிலையங்களும் 1959–60ம் ஆண்டிலும் பார்க்க 1960–61ல் 151 இலட்சம் ரூபாய்கள் கூடுதலான தொகையை உதவின. ஊழியர் சேமநிதி 1959–60ம் ஆண்டிலும் பார்க்க 76 இலட்சம் ரூபாய்கள் கூடிய தொகையை 1960–61ல் அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்தது. 1960–61ல் அரசாங்க ஆதிக்கமுள்ள சேமிப்பு நிலையங்கள், தத்தம் அரசாங்க பத்திர உடமைகளை 228 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. 1959–60ல் இந்நிலையங்களின் உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 171 இலட்சம் ரூபாய்களாகும். காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் 1960–61ல், 1959–60ம் ஆண்டிலும் பார்க்க 35 இலட்சம் ரூபாய்கள் கூடிய தொகையை அரசாங்க கடன்களுக்கு வழங்கின. இதர கூட்டுநிலையங்கள் தம் உடமைகளை 104 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. 1959–60ல் இவை தம் உடமைகளை 81 இலட்சம் ரூபாய்களால் குறைந்தன.

1959–60ல் மூலதனச் செலவிற்காகப் பெற்ற அந்நிய உதவி 386 இலட்சம் ரூபாய்களாக விளங்க, 1960–61ல் இது 296 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. இவ்வரவாகிய 296 இலட்சம் ரூபாய்கள், 163 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கடன்களையும் 133 இலட்சம் ரூபாய்கள் கொண்ட கொடைகளையும் கொண்டுள்ளதாக விளங்கின. இவ்வாண்டில் திருப்பிக் கொடுக்கப்பட்ட அந்நிய கடன்களின் தொகை 29 இலட்சம் ரூபாய்களாக இருந்தது.

பொதுப்படுகடன் (1): உள்நாட்டினதும், வெளிநாட்டினதும் பொதுப்படுகடன் பற்றிய விபரங்கள் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. (பின்னிணைப்பைப் பார்க்க). கடந்த ஐந்து நிதியாண்டுகளின் ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் இருந்த மொத்தப் பொதுப்படுகடன் தொகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை II—45**

மொத்தப் பொதுப்படுகடன்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| புரட்டாதி முடிவில் | மொத்தம் | (ஆழ்நிதியின் நிகர பெறுமானம் கழித்து) |
|---|---|---|
| 1957 .. .. .. .. .. .. | 1,366·9 | 1,123·3 |
| 1958 .. .. .. .. .. .. | 1,495·4 | 1,212·1 |
| 1959 .. .. .. .. .. .. | 1,837·0 | 1,524·7 |
| 1960 .. .. .. .. .. .. | 2,230·4 | 1,912·8 |
| 1961 .. .. .. .. .. .. | 2,651·0 | 2,332·7 |

மூலம்: இலங்கை மகா வங்கி

(1) பொதுப்படுகடனின் இவ்வெண்தொகைகள், 700 இலட்சம் ரூாய்கள்கொண்ட தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளைத் தவிர்க்கின்றன.

1960/61ம் நிதியாண்டில் முழுக்கடனிலும், நிகரக் கடனிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் முறையே 4206 இலட்சம் ரூபாய்களும், 4199 இலட்சம் ரூபாய்களும் ஆகும். 1959-60ல் இவ்வதிகரிப்புக்கள் முறையே 3935 இலட்சம் ரூபாய்களாகவும், 3888 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. முழுக்கடனில் ஏற்பட்ட 4206 இலட்சம் ரூபாய்கள்கொண்ட அதிகரிப்பு, ரூபாப் பிணைகளில் உண்டான 1798 இலட்சம் ரூபாய் உயர்ச்சியையும், இறைசேரி உண்டியல்களில் உண்டான 2000 இலட்சம் ரூபாய் உயர்ச்சியையும், மகாவங்கியின் முற்பணங்களில் உண்டான 228 இலட்சம் ரூபாய் உயர்ச்சியையும், வரிப்பண ஒதுக்கப் பத்திரங்களில் உண்டாகிய 47 இலட்சம் ரூபாய் உயர்ச்சியையும், அந்நியக் கடன்களில் ஏற்பட்ட 134 இலட்சம் ரூபாய் உயர்ச்சியையும் கொண்டிருந்தன.

ரூபாப் பிணைகள்: கீழ் தரப்பட்டிருக்கும் அட்டவணை, கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கடன்களினதும், தீர்க்கப்பட்ட கடன்களினதும் தொகைகளைக் காட்டுகின்றது.

அட்டவணை II—46

ரூபாய்களில்

| நிதி ஆண்டு | திரட்டப் பட்ட கடன் | திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன் |
|---|---|---|
| 1956-57 .. .. .. .. .. .. | 95,000,000 | 15,093,200 |
| 1957-58 .. .. .. .. .. .. | 79,474,400 | 56,143,700 |
| 1958-59 .. .. .. .. .. .. | 120,416,800 | 35,025,200 |
| 1959-60 .. .. .. .. .. .. | 195,000,000 | 55,239,200 |
| 1960-61 .. .. .. .. .. .. | 269,583,200 | 89,748,800 |

மூலம்: இலங்கை மகா வங்கி

1960/61ம் நிதியாண்டில் ரூபாய்ப் பிணைகளில் பத்து வெளியீடுகள் காணப்பட்டன. இவற்றில் 3 சதவீத வட்டிகொண்ட 1965-67க் கடனும், 4¼ சதவீத வட்டிகொண்ட 1981-85க் கடனும், முற்றுப் பெறுகின்ற 352 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட 2½ சதவீத வட்டியுள்ள தேசிய அபிவிருத்தி 1955-60 கடனை மீண்டும் முதலீடு செய்வதற்கு, ஓரளவு உதவின. இவ்வாறு மீண்டும் முதலீடுசெய்த தொகை 304 இலட்சம் ரூபாய்களாக உள்ளன. ஆழ்நிதியில்லாத 3½ சதவீத வட்டிகொண்ட 546 இலட்சம் ரூபாய்களாக உள்ள 1959-60 கடனை மாற்றுவதற்கு, 3 சதவீத வட்டிகொண்ட 1964-66 கடனும், 4¼ சதவீத வட்டிகொண்ட 1982-86 ''இ'' தொடர்க்கடனும் உதவின.

பணத்திற்காக மட்டும் வெளியிடப்பட்ட இதர ஆறு கடன்களாவன:- 1960 மார்கழியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிகொண்ட 1981-85 ''பி'' தொடர் கடன், 1961ம் ஆண்டு தையில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிகொண்ட 1982-86 கடன், 1961 மாசியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிகொண்ட 1982-86 ''பி'' தொடர்கடன், 1961 ஆடியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிகொண்ட 1982-86 ''டி'' தொடர்கடன், 1961 புரட்டாதியில் வெளியிடப்பட்ட 4¼ சதவீத வட்டிகொண்ட 1982-86 ''எப்'' தொடர்கடன் ஆகும். இச்சகல வெளியீட்டுக்களின் மொத்தத் தொகையான 2629 இலட்சம் ரூபாய்களும் முற்றுகச் சேர்க்கப்பட்டுள்ளன. இக்கடன் ஒதுக்குகளின் பாகுபாடு அட்டவணை II—47ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## அட்டவணை—II—47

### அரசாங்கப் பிணைகளில் செய்யப்பட்ட ஒதுக்கல்களின் பாகுபாடு

பத்து இலட்சம் ரூபாய்கள்

| பணம் ஒப்பிபோரின் வகுப்பு | 3% கடன் 1965–67 இருப்புச் செய்யப்பட்ட முதலீடுகள் (1) | 3% கடன் 1965–67 பணம் | 4% கடன் 1981–85 இருப்புச் செய்யப்பட்ட முதலீடுகள் (1) | 4% கடன் 1981–85 பணம் | 4¼% கடன் 1981–85 "B" தொடர் | 4¼% கடன் 1982–86 | 4¼% கடன் 1982–86 "B" தொடர் | 4¼% கடன் 1982–86 "C" தொடர் | 4¼% கடன் 1982–86 "D" தொடர் | 3% கடன் 1964–66 இருப்புச் செய்யப்பட்ட முதலீடுகள் (2) | 3% கடன் 1964–66 பணம் | 4¼% கடன் 1982–86 "E" தொடர் இருப்புச் செய்யப்பட்ட முதலீடுகள் (2) | 4¼% கடன் 1982–86 "E" தொடர் பணம் | 4¼% கடன் 1982–86 "F" தொடர் | மொத்தம் தொகை | மொத்தம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வர்த்தக வங்கிகள் .. .. .. | 9·2 | 1·2 | 18·9 | 1·4 | — | — | — | — | — | 2·5 | — | 2·3 | 0·5 | 2·0 | 38·0 | 14·1 |
| கூட்டுறவு மாகாண வங்கிகள் .. .. | — | — | — | — | 1·4 | 0·6 | — | — | — | — | — | 0·1 | 0·1 | — | 2·2 | 0·8 |
| சேமிப்பு நிலையங்கள் .. .. | — | — | 0·7 | 8·6 | 5·7 | 2·2 | 1·7 | 1·1 | 4·0 | — | — | 31·5 | 0·2 | — | 55·7 | 20·7 |
| ஆழ் நிதிகள் .. .. .. | — | — | — | — | — | 6·7 | 16·5 | 7·2 | 7·0 | — | — | — | — | 6·7 | 44·1 | 16·4 |
| திணைக்கள நிதிகளும், ஏனைய அரசகரும நிதிகளும் .. .. .. | — | 1·0 | — | 1·2 | 1·4 | 1·1 | ... | 1·6 | 0·3 | — | — | 0·6 | — | 0·2 | 7·4 | 2·7 |
| நம்பிக்கைச் சொத்துகளும், சேமநிதிகளும், உபகாரச் சம்பள நிதிகளும்: | | | | | | | | | | | | | | | | |
| (அ) ஊழியர் சேமநிதி .. .. | — | — | — | 5·1 | 6·7 | 6·8 | 9·3 | 9·0 | 7·4 | — | 0·2 | 3·3 | 1·1 | 7·7 | 56·6 | 21·0 |
| (ஆ) ஏனையவை .. .. | 0·1 | 1·5 | 0·1 | 6·4 | 5·7 | 5·7 | 2·2 | 3·8 | 5·2 | 0·1 | — | 1·4 | 1·0 | 1·5 | 34·7 | 12·9 |
| காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் .. .. | — | 0·4 | ... | 0·6 | 3·8 | 1·3 | 2·3 | 2·3 | 0·2 | 3·1 | 1·8 | 2·8 | 1·1 | 1·5 | 21·2 | 7·9 |
| இதர கூட்டுநிலையங்கள் .. .. | 0·3 | 1·6 | ... | — | — | 0·1 | — | — | — | — | — | — | — | — | 2·0 | 0·7 |
| தனியாட்களும், சங்கங்களும், நிலையங்களும் | — | 0·1 | 1·1 | 0·6 | 0·2 | 0·5 | 2·9 | 0·1 | 1·0 | 0·1 | — | 0·7 | 0·2 | 0·4 | 7·9 | 2·9 |
| மொத்தம் .. .. | 9·6 | 5·8 | 20·8 | 23·9 | 25·0 | 25·0 | 53·0 | 25·0 | 25·0 | 5·8 | 2·0 | 42·7 | 4·1 | 20·0 | 269·6 | 100·0 |

மூலம்: இலங்கை மகா வங்கி

(1) முதிர்வு பெற்ற 2½% வட்டி கொண்ட தேசிய அபிவிருத்திக்கடன் 1955/60, ஆகிய பிணைகளைக் கொடுத்து, புதிய கடன்களில் செய்யப்பட்ட முதலீடுகள்.

(2) முதிர்வு பெற்ற 3½% வட்டி கொண்ட கடன் 1959/60, ஆகிய பிணைகளைக் கொடுத்து, புதிய கடன்களிற் செய்யப்பட்ட முதலீடுகள்.

இறைசேரி உண்டியல்கள்: முந்தைய இரு நிதியாண்டைப்போலவே 1960–61ம் நிதி ஆண்டிலும் பொதுபடுகடனில் உண்டான அதிகரிப்பில் இறைசேரி உண்டியல்களின் அளவின் அதிகரிப்பே ஆகப்பெரிய பங்காக அமைந்திருந்தது. 1960ம் ஆண்டு புரட்டாதி முடிவில் 5500 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இறைசேரி உண்டியல் நிலுவைகளின் அளவு, 1961ம் ஆண்டு புரட்டாதி முடிவில் 7500 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. இவ்வதிகரிப்பில் பெரும் பகுதியை மகாவங்கியே ஏற்றுக்கொண்டது.

1960–61ம் நிதியாண்டில், இறைசேரி உண்டியல்களின் சட்டபூர்வமான எல்லை, ஆனிமாதம் 8ம் திகதியில் 6500 இலட்சம் ரூபாய்களிலிருந்து 7500 இலட்சம் ரூபாய்களுக்குப் பாராளுமன்றத்தால் உயர்த்தப்பட்டது.

அந்நியக் கடன்: மொத்த அந்நியக் கடனில் ஏற்பட்ட நிகர அதிகரிப்பு 134 இலட்சம் ரூபாய்களாகும். இஃது எவ்வாறெனின், அந்நியக் கடன் ஒப்பந்தங்களின் கீழ் 163 இலட்சம் ரூபாய்கள்கொண்ட வரவுகள் காணப்பட்டபொழுதிலும், 25 இலட்சம் ரூபாய்கள்கொண்ட சர்வதேச புனருத்தாரண அபிவிருத்தி வங்கியின் கடன்களும், 4 இலட்சம் ரூபாய்கள்கொண்ட அபிவிருத்திக் கடன் நிதிகளின் கடன்களும், திருப்பிக் கொடுக்கப்பட்டன. மொத்த அந்நியக் கடன்களை அவற்றை வழங்கிய மூல ஆதாரங்களுடன் பின்வரும் அட்டவணை தருகின்றது.

அட்டவணை II —48

அந்நியக் கடன்பாடு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | |
|---|---|
| சர்வதேசப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி .. .. .. .. | 11·7 |
| சர்வதேச கூட்டுறவு நிர்வாகம் (ஐக்கிய அமெரிக்கா) .. .. .. | 0·8 |
| ஐக்கிய அமெரிக்க அபிவிருத்திக் கடன் நிதி .. .. .. | 2·0 |
| ரூசியா .. .. .. .. .. .. | 1·8 |
| | 16·3 |
| திருப்பிக் கொடுக்கப்பட்டவை (நீக்கி) .. | –2·9 |
| | 13·4 |

மூலம்: இலங்கை மகா வங்கி

ஆழ்நிதிகள்: 1960–61ம் நிதியாண்டின் இறுதியில் பொதுப்படுகடனை மீட்பதற்காக உள்ள ஆழ்நிதிகளின் பெறுமானம் 3183 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. 1959–60ல் நிதியாண்டுத் தொகைகளுடன் ஒப்பிடுகையில் இது 8 இலட்சம் ரூபாய்கள்கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது. 1960ல் முற்றுப்பெற்ற 2½ சதவீத வட்டி கொண்ட தேசிய அபிவிருத்தி 1955–60 கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக 352 இலட்சம் ரூபாய்கள்கொண்ட ஓர் தொகை ஆழ்நிதியிலிருந்து எடுக்கப்பட்டது. இவ்வாண்டு வரவு செலவுத் திட்டம் ஆழ்நிதிகளுக்கு உதவிய தொகை 328 இலட்சம் ரூபாய்களாகவும், ஆழ்நிதியின் முதலீடுகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட வட்டிகளின் தொகை 112 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. ஆழ்நிதி முதலீட்டு உடமைகளின் சந்தைப் பெறுமானம் 79 இலட்சம் ரூபாய்கள்கொண்ட ஓர் ஏட்டு இழப்பைக் காட்டிற்று.

அரசாங்க ஆதிக்கமுள்ள நிலையங்களின் கடன்பாடு: 1960–61ல் தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்முறிகள் ஒன்றும் வெளியிடப்படவில்லை. ஆனல், 1961ம் ஆண்டு ஆனியில் அரசாங்கம் 100 இலட்சம் ரூபாய்கள்கொண்ட ஓர் கடனை தேசிய வீடமைப்பு ஆணையாளருக்கு நேரடியாக வழங்கியது. இதனல் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நேரடிக் கடன்களின் மொத்தம் 300 இலட்சம் ரூபாய்களாயிற்று. வெளிநின்ற மொத்த தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளின் தொகை 700 இலட்சம் ரூபாய்களாகவே தங்கிநின்றது. நிதியாண்டின் முடிவில் தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்முறிகளை மீள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஆழ்நிதிகளின் சந்தைப் பெறுமானம் 118 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று.

1961ம் ஆண்டு தையில், 50 இலட்சம் ரூபாய்களைக்கொண்ட தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக் கடன்முறி ஒன்று வெளியிடப்பட்டது. தன் இயக்கங்களைக் கொண்டு நடத்துவதற்காக, இவ்வங்கி வர்த்தக வங்கிகளிடமிருந்து மேலதிகப் பற்றுக்களைத் தொடர்ந்து பெற்றுக்கொண்டிருந்தது. 1959/60ல் இவ்வங்கி பெறக்

கூடிய கடனின் வரையறுக்கப்பட்ட எல்லை 500 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. 1961ம் ஆண்டு வைகாசியில் இவ்வெல்லையை 600 இலட்சம் ரூபாய்களுக்கு, தேசிய ஈட்டுவங்கி அதிகாரச் சட்டத்தின் 35ம் பிரிவின்கீழ், நிதியமைச்சர் உயர்த்தினர். 1960 புரட்டாதி 30ம் திகதியில் உள்ளபடி, இவ்வங்கித் தொகுதிக் கடன் முறி நிலுவைகளின் தொகை 458 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. உத்தரவாதம் அளிக்கப்பட்ட இவ்வங்கியின் மேலதிகப் பற்று நிலுவைகளின் தொகை 93 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று.

### 1961–62 வரவு செலவுத் திட்டம்

பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டபடி, 1961/62ம் ஆண்டுக்கான வரவு செலவுகளின் மூலமதிப்பீடுகள் பின்வருமாறு:-

அட்டவணை II—49

வரவு செலவுத்திட்ட மூலமதிப்பீடுகள்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | | |
|---|---|---|
| மீண்டெழும் செலவு (அதாவது 1, 2, 4, 6, வாக்களிப்புக்கள்) .. .. | 1,623·3 | |
| 2½ சதவீத குறைவுச் செலவு கழித்து .. .. .. .. | — 40·6 | 1,582·7 |
| (வரவுசெலவுத்திட்ட) மூலதனச்செலவு (அதாவது 3, 5, 7 வாக்களிப்புக்கள்) .. | 615·8 | |
| 15 சதவீத குறைவுச் செலவு கழித்து .. .. .. .. | — 92·4 | 523·4 |
| மொத்தச் செலவு .. .. .. .. .. .. | | 2,106·1 |
| மொத்த அரசிறை .. .. .. .. .. .. | | 1,776·7 |
| மதிப்பிடப்பட்ட வரவுசெலவுத்திட்டக்குறை .. .. .. | | 329·4 |
| ஆழ்நிதியின் உதவுதொகை கழித்து .. .. .. .. | | — 48·9 |
| மதிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகரப் பணக்குறை .. .. | | 280·5 |

மூலம்: இலங்கை மகா வங்கி

நிதியமைச்சர் குறித்துக்காட்டிய நிதி ஆதாரங்கள், உள்நாட்டுப் பணச் சந்தைக் கடன்பாடுமூலம் 1511 இலட்சம் ரூபாய்களும்,* அந்நிய உதவிமூலம் 1400 இலட்சம் ரூபாய்களும் ஆகும்.

அரசிறை: 1961/62ம் ஆண்டுக்கான அரசிறையின் மூலமதிப்பீடாகிய 17767 இலட்சம் ரூபாய்கள், 1961/62க்குரிய வரவு செலவுத் திட்டம் புகுத்திய புதிய வரி நடவடிக்கைகள் மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட 1750 இலட்சம் ரூபாய்களையும் கொண்டுள்ளன. பிரதான புதிய வரி நடவடிக்கைகள் பின்வருபவனவற்றைக் கொண்டுள்ளன:– 250 இலட்சம் ரூபாய்களை அளிக்கும் என மதிப்பிடப்பட்ட தேசிய அபிவிருத்தி வரி; 450 இலட்சம் ரூபாய்களை அளிக்கும் என மதிப்பிடப்பட்ட விற்பனை வரி; 367 இலட்சம் ரூபாய்களை அளிக்கும் என மதிப்பிடப்பட்ட சொந்தத் தொழிலாற்றுவோர்மேல் விதிக்கப்பட்ட பதிவு வரி; 10 இலட்சம் ரூபாய்களை அளிக்கும் என மதிப்பிடப்பட்ட குறித்த எல்லைக்குமேல் உள்ள வருமானத்தின்பேரில் விதிக்கப்பட்ட 100 சதவீத வரி; இறக்குமதி செய்யப்பட்ட மதுபானம், புகையிலை, உள்நாட்டில் உற்பத்திசெய்யப்பட்ட மதுபானம், புகையிலை ஆகிய இரண்டின்பேரிலும் விதிக்கப்பட்ட உயர்ந்த வரிகள் முதலியன ஆகும். அத்துடன் செல்வவரி, நிலவரி, வருமானவரி ஆகியவற்றிற்குத் திருத்தங்கள் செய்யப்பட்டன. இவ்வரிகளின் அடிப்படையை விரிவாக்குவதன்மூலம் இவ்வாதாரங்களிலிருந்து கிடைக்கும் அரசிறையை இத்திருத்தங்கள் அதிகரிக்கச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வியாபாரப் பெயர் பதிவுவரி, உயர்தொழில் வரி முதலியவற்றிற்குப் பதிலாக சொந்தத் தொழிலாற்றுவோர் பதிவுவரி இடம் பெறுகின்றது.

---

* நிதியமைச்சரால் அறிவிக்கப்பட்ட தொகை 2000 இலட்சம் ரூபாய்களாகும். ஆழ்நிதிக்கு உதவப்படும் தொகைகள் நிகரப்பணக் குறையைக் கணிப்பதற்குச் சேர்க்கப்படுவதில்லை. ஆதலின் மேற்கூறிய தொகையிலிருந்து, ஆழ்நிதிக்கு உதவிய தொகையாகிய 489 இலட்சம் ரூபா நீக்கிய பின்னர் 1511 இலட்சம் ரூபா பெறப்பட்டது.

தற்போதைய அறிகுறிகளின்படி, 1961–62ம் ஆண்டுகளுக்கான உண்மை அரசிறை, மூலமதிப்பீடாகிய 17767 இலட்சம் ரூபாய்களிலும் பார்க்கக் குறைவாக விளங்கும் எனத் தெரிகின்றது. தேயிலே, இரப்பர் ஆகியவற்றிற்கு உலகச் சந்தைகளில் ஏற்பட்ட மந்தம், இவைகளின்மூலம் கிடைக்கும் அரசிறையைப் பாதிக்கும். மேலும் இறக்குமதிகளின் பேரில் விதிக்கப்பட்ட உயர்ந்த தீர்வைகளும், கட்டுப்பாடுகளும், இறக்குமதித் தீர்வைகளிலிருந்து கிடைக்கும் அரசிறையைச் சற்று குறைத்துவிடும். நிர்வாகக் கஷ்டங்கள் காரணமாக, புதிய வரிகள்மூலம் கிடைக்கும் வருவாய்கள் எதிர்பார்த்த அளவிற்கு இல்லாமல் போகவும் கூடும். 450 இலட்சம் ரூபாய்களே அளிக்கும் என மதிப்பிடப்பட்ட விற்பனே வரி இதுவரையில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லே.

நடைமுறைச் செலவு: எதிர்பார்க்கப்படுகின்ற $2\frac{1}{2}$ சதவீத குறைவுச் செலவுக்கு இடம் விட்டபின்னர் 1961–62க்காக மதிப்பிடப்பட்ட மீண்டு எழும் செலவு (அதாவது 1, 2, 4, 6, வாக்களிப்புக்களின் மொத்தம்) 15827 இலட்சம் ரூபாய்களாக விளங்குகின்றது. 489 இலட்சம் ரூபாய்களேக்கொண்ட ஆழ்நிதி உதவு தொகையையும், 835 இலட்சம் ரூபாய்களேக்கொண்ட மீண்டெழும் செலவு வாக்களிப்புக்களில் உள்ள மூலதன விடயங்களேயும் நீக்கினுல் மொத்த நடைமுறைச் செலவு 14503 இலட்சம் ரூபாய்களாகும். இத்தொகை மூலமதிப்பீடுகளிலும் பார்க்க 137 இலட்சம் ரூபாய்களால் குறைந்தும், 1960/61ல் உண்மையாக ஏற்பட்ட செலவிலும் பார்க்க 304 இலட்சம் ரூபாய்களால் குறைந்தும் காணப்படுகின்றது. சமூக சேவைச் செலவு, 1960–61க்கான மூலமதிப்பீட்டிலும் பார்க்க 205 இலட்சம் ரூபாய்களால் கூடியது என மதிபிடப்பட்டுள்ளது. கோதுமை மா, சீனி ஆகியவற்றின் சில்லறை விலேகளின் அதிகரிப்புக் காரணமாகவும், சீனியினது கொள்விலேயின் வீழ்ச்சி காரணமாகவும், உணவு மான்யக் கணக்கு தாழ்ந்து விளங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1961–62க்கான உணவு மான்யக் கணக்கு 1714 இலட்சம் ரூபாய்களாக விளங்கும் என எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. இக்குறைந்த உணவு மான்யக் கணக்கு காரணமாகவே, மொத்த நடைமுறைச் செலவில் மேற்கூறிய குறைவு பெரும்பாலும் ஏற்பட்டது. 1960–61க்கான உணவு மான்யம் 2480 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று.

மூலதனச் செலவு: 15 சதவீதக் குறைவுச் செலவுக்கு இடம்விட்டபின்னர், மூலதனச் செலவின் மூலமதிப்பீடுகளின் (அதாவது 3, 5, 7 வாக்களிப்புக்களின்) மொத்தம் 5234 இலட்சம் ரூபாய்களாகும். 835 இலட்சம் ரூபாய்களேக்கொண்ட மீண்டெழும் செலவு வாக்களிப்புக்களில் உள்ள மூலதன விடயங்களேயும், 336 இலட்சம் ரூபாய்களேக்கொண்ட வரவு செலவுத் திட்டத்திற்கு மேலதிகமான இதர மூலதனச் செலவுகளேயும் சேர்த்தால், அரசாங்க மொத்த மூலதனச் செலவு 6405 இலட்சம் ரூபாய்களேக் கொண்டதாகும். இத்தொகை, மூலமதிப்பீட்டிற் பார்க்க 1176 இலட்சம் ரூபாய்களாலும், 1960–61ல் உண்மையான மூலதனச் செலவிலும் பார்க்க 1251 இலட்சம் ரூபாய்களாலும் கூடிக் காணப்படுகின்றது. 1960–61க்கான மூலமதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், பிரதான அதிகரிப்புக்கள் கல்வி, வீடமைப்பு, பொருளாதாரச் சேவைகள், துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனம், இலங்கை போக்குவரத்துச் சபை போன்ற அரசாங்க முகவர் நிலேயங்களுக்கு வழங்கிய கடன்கள், ஆகியன சம்பந்தமாகவே ஏற்பட்டுள்ளது.

வரவுசெலவுத் திட்டக் குறைக்கு நிதியீட்டுதல்: உள்நாட்டுப் பணச்சந்தைக் கடன்பாடு மூலம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட 2000 இலட்சம் ரூபாய்கள், நடுத்தரகால, நீண்டகாலக் கடன்பாடுகளேயே குறிக்கின்றது போலும். 1960–61ல் அரசாங்க ரூபாப் பிணேகளின் வெளியீடுமூலம் வங்கிகளிடமிருந்தும், முதலீடு செய்யும் ஏனேயோரிடமிருந்தும் பெற்ற 2150 இலட்சம் ரூபாய்களுடன் மேற்கூறிய மதிப்பீட்டுத் தொகை ஒப்பிடத்தக்கதாக விளங்குகின்றது. நிதியாண்டின் முதல் ஐந்து மாதங்களில் நடுத்தர கால, நீண்டகால கடன்பாடுகள் மூலம் பெற்ற தொகை 650 இலட்சம் ரூபாய்களாகும்.

அந்நிய உதவி மூலம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்ட 1400 இலட்சம் ரூபாய்களில் 1230 இலட்சம் ரூபாய்கள் முடிவாக்கப்பட்ட ஒப்பந்தங்களே அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டன. இத்தொகை, 1150 இலட்சம் ரூபாய்கள்கொண்ட பெறுமானத்தையுடைய நேரடி அந்நிய உதவியையும், ஐக்கிய அமெரிக்க உதவியினுல் எழுந்த உள்நாட்டு நிதிகளிலிருந்து 80 இலட்சம் ரூபாய்களேயும் அடக்கியுள்ளது.